## தலைப்பு 440 – இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்.

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் :-

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிநிலை அறிக்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்துப்போகின்றன,

(ஆ) முந்தைய ஆண்டின் நிதிநிலை அறிக்கை தொடர்பில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூ.1,719,689 ஆனது சொத்து,அலுவலக,கணிணி மற்றும் தகவல் தொடர்பு சாதன உபகரணங்களின் தொடக்க இருப்பில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதன் துல்லியத்தை சரிபார்க்க அந்த மதிப்பை உருவாக்கிய உருப்படிகள் மற்றும் மதிப்புக்களின் விவரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுக்கணக்குகள் வழிகாட்டல்கள் எண்:2021/03,05 ன் நிதிநிலை அறிக்கைகளுக்கான வழிகாட்டுதல்களின் (ACA-6); குறிப்பிடப்பட்ட வடிவத்தின் படி புதிய CIGA’s வலைத்தளத்தினால் உருவாக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கை (SA-82) மட்டுமே இணைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சொத்து மற்றும் உபகரணங்களின் மதிப்பு எவ்வாறு உருவாகின்றது என்பதற்கான விரிவான அறிக்கைகள் பராமரிக்கப்பட வேண்டும். |

## 1.6.2 பதிவுகள் மற்றும் புத்தகங்கள் பராமரிக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரி சுற்றறிக்கை எண் 842 இன் படி நிலையான சொத்துப்பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் என்றாலும் அது செய்யப்படவில்லை. | நிலையான சொத்துக்களின் பதிவேடு பராமரிக்கப்டுகிறது. | நிலையான சொத்துக்களின் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி நி.யி 110 படி சேதப்பதிவேடு பராமரிக்கப்பட்டு பேணிச்செல்லப்பட வேண்டும். | சேதப்பதிவேடு பராமரிக்கப்படுகின்றது. | -மேற்படி- |

## 2. நிதி மதிப்பாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிகழ்ச்சித் திட்டம் 1 மற்றும் நிகழ்ச்சித் திட்டம் 2 இன் கீழ் மீண்டெழும் செலவினத்திற்காக பாதீட்டு மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய நிதிஏற்பாடு ரூபா 206,947,000 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 123,849,582 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 83,097,418 மீண்டெழும் செலவினத்திற்கான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது தேறிய நிதி ஏற்பாட்டில் 40 சதவீதம் ஆகும். அதன்படி 15 மீண்டெழும் செலவு உருப்படிகளில் 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிப்பு இருந்தது. | கோவிட் -19 நிலமை காரனமாக நிறவனத்தின் செயற்பாடுகள் எதிர்பாரத விதமாக மந்தமானதுடன்,பற்றாக்கறை யான பணியாளர்கள் மற்றும் தேசிய வரவு செலவு திணைக்களத்தின் அறிவுரைப்படி செலவுகளை சிக்கனப்படுத்தி மிகமுக்கியமான செலவுகளை மாத்திரம் மேற்கொண்டமையானது சேமிப்பிற்கு வழிவகுத்தது. | ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்தி அமைச்சின் நோக்கங்களை செயற்திறனாக அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிகழ்ச்சித் திட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் மூலதன செலவினத்திற்காக பாதீட்டு மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய நிதிஏற்பாடு ரூபா 87,300,000 ஆக இருந்ததுடன், உள்ளபடியான செலவினம் ரூபா 32,781,644 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 54,518,356 தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாதிருந்ததுடன், அது தேறிய நிதிஏற்பாட்டில் 62 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி 4 மூலதன செலவு உருப்படிகளில் 61 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிப்பு இருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | நி.யி 66 இன் கீழ் வேறு செலவின மற்றும் மூலதன சொத்து பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் ஒதுக்கம் ரூபா 5,000,000 ஆனது வாகன செலவு உருப்படிக்கு நிதியாண்டின் போது மாற்றப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,728,542 ஆனது நிதியாண்டு முடிவுவரை செலவிடப்படாமல் இருந்நது. | அமைச்சர்களின் வாகனங்களை பழுதுபார்க்கும் நோக்கிலே ரூபா 5 மில்லியன் நி.யி 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவை தீர்மானத்தின் படி வரவு செலவு திணைக்களத்தினால் முக்கிய செலவுகளை மாத்திரம் மேற்கொள்ளும்படி கூறப்பட்டதனால் இச்சேமிப்பு உருவானது. | தேவை சரியாக அடையாளம் காணப்பட்டு நி.யி கீழ் மாற்றல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள்,விதிகள் ஒழுங்கு முறைகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள,விதிகள், ஒழுங்கு முறைகளுக்கான குறிப்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) | 28 யூன் 2017 ஆந் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017 | சொத்துக்களை வாங்குதல் மற்றும் விற்றல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ம் ஆண்டு முதல் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 24 ஜனவரி 2018 ம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2018/02 . | மனித வளத்திட்டம் இணைப்பு 2 இன் மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு மனிதவளத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. | -மேற்படி- |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

### 3.1 நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை

-------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ம் ஆண்டில்,தேசிய இரத்தினங்கள் மற்றும் தங்காபரணங்கள் சட்டத்தை திருத்துவதற்கு அறிவுரை வழங்படிருந்த போதிலும் நிதியாண்டில் அமைச்சரவையிடம் இருந்து உரிய அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | கோவிட் காரணமாக இரத்தினம் மற்றும் தங்காபரணம் தொடர்பான உலக சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சிப்போக்கு காரணமாக குறித்த வரைபு மீளாய்விற்கு உட்படுத்த வேண்டியிருந்தது இது தொடர்பில் 2021,நவம்பர் 5 இல் அமைச்சரவை அலுவலக வேண்டுகோளுக்கிணங்க குறிப்பானை ஒன்று குறித்த சட்டத்தினை திருத்துவதற்காக அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ஓர் கருத்துருவாக்கப்பத்திரமும் தயாரிக்கப்பட்டிருந்தது. | தேசிய இரத்தினங்கள் மற்றும் தங்காபரணங்கள் சட்டத்தை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தங்கத்தை இறக்கமதி செய்யும்போது இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் பெறப்பட வேண்டுமென்றும் CIF பெறுமதியில் 0.4 சதவீத இறக்குமதி கட்டணம் செலுத்தப்பட வேண்டுமென்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது இதன் காரனமாக நகைக்கடை உரிமையாளர்களக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைப்பதற்காக அவர்களின் வேண்டுகோளிற்கு | தற்போது நிலவி வரும் அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக 2021 ம் ஆண்டு ஏற்றுமதி,இறக்குமதி கட்டுப்பாட்டாளரினால் தங்கம் இறக்குமதியின் போது இறக்குமதி உரிமம் பெறப்பட வேண்டுமென்றும் அதற்கான கட்டணமாக CIF பெறுமதியில் 0.4 சதவீதம் செலுத்தப்பட வேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டிருந்தது தங்கமானது பெறுமதி கூட்டப்பட்ட ஏற்றுமதி, நுகர்வு ஆகிய நோக்கங்களுக்காக பிரதானமாக இறக்குமதி செய்யப்படுகின்றது ஆகையால் இறக்குமதி செய்யப்படுகின்ற தங்கம் அனைத்தும் ஏற்றுமதி | தங்க நகைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய செலாவணியினை ஈட்டக்கூடிய முறையான திட்டம் உருவாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணங்க குறித்த கட்டணத்தை நீக்குவதற்கு குறித்த அமைச்சினால் நிதியமைச்சிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. ,மேலும் இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்திலும் பார்க்க கூடியளவு தங்கம் ஏற்றுமதி செய்யப்படாத காரணத்தினால் அந்நிய செலாவணி கையிருப்பில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கவில்லை என்பதனையும் அதிகார சபை சுட்டிக்காட்டியிருந்தது. | செய்யப்படுவதில்லை. மேலும் 2018 மற்றும் 2021 இல் விதிக்கப்பட்ட கட்டணமானது இலங்கையில் தங்க இறக்குமதியினை குறைப்பதற்கோ அல்லது தங்க நுகர்வினை கட்டுப்படுத்துவதற்கோ இல்லையென சுட்டிக்காட்டுகின்றேன். | |
| (இ) | நிதியாண்டின் போது இரத்தினக்கல் வணிகம் தொடர்பில் அனுமதியளிதிதல்,பிற சேவைகளை வழங்குதல் மற்றும் சூழல் தொடர்பரன பிரச்சினைகள் தொடர்பில் மொத்தம் 120 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன ஆனால் அவற்றில் 10 முறைப்பாடுகளுக்கு மாத்திரமே உரியவாறான தீர்வளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேலதிக விசாரனைகளை மேற்கொள்வதற்கு எந்த நடவடிக்கைகளும் கேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட்ட புகார்கள் அதிகாரிகள்/நிறுவனம் தொடர்பான முறைகேடுகள்,இரத்தினக்கல் வியாபாரம் தொடர்பான அனுமதியளித்தல் தொடர்பான முறைகேடுகள்,வணிக நடவடிக்கை தொடர்பான முறைகேடுகள் மற்றும் தங்கம் தொடர்பான முறைகேடுகள் என பல்வேறு வகைகளாக காணப்பட்டது. இது தொடர்பில் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக விசாரனைகள் நடரத்தப்பட்டு அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு கூடியளவு நேரம் எடுப்பதனால் தற்போது 43 புகார்கள் பரீட்சிக்கப்பட்டு தேவையான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. | பொது மக்கள் முறைப்பாடுகள் சரியாக விசாரிக்கப்பட்டு தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இரத்தினக்கற்கள் உட்பட கனிய வளங்களை பெறுமதி கூட்டப்படாமல் ஏற்றுமதி செய்யப்படுவது தொடர்பில் அமைச்சின் கீழ் உள்ள இரு நிறுவனங்களிலும் பின்வரும் பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | தற்போது இலங்கையில் காணப்படும் இரத்தினங்கள் வெட்டி எடுக்கப்பட்டு பெறுமதி கூட்டல் இல்லாமல் மெருகூட்டப்படுகின்றது அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்றது. செப்ரம்பர் 2015-2021 இடைப்பட்ட காலத்தில் பெறுமதி கூட்டப்படாமல் ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினங்களின் பெறுமதி ரூபா 127,635 மில்லியன்களாக இருந்தது. | இலங்கையில் காணப்படுகின்ற இரத்தினங்கள் அதற்கான பெறுமதி கூட்டப்படுகின்ற தொழிநுட்பம் இலங்கையில் கானப்படாத போது மாத்திரம் பெறுமதி கூட்டல் இல்லாமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுகின்றது.இவ்வாறு பெறுமதி கூட்டலின்றி ஏற்றுமதி செய்யும் போது அப்பெறுமதியில் 25 சதவீதம் இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைக்கு சேவைக்கட்டணமாக செலுத்த வேண்டும். | பெறுமதி கூட்டப்பட்டு ஏற்றுமதி செய்து அதிக வருமானம் பெறக்கூடிய முறைமை உருவாக்கப்பட வேண்டும். |
| (ii) | பெறுமதி குறைந்த இரத்தினக்கற்களின் நிறம் மற்றும் தெளிவினை அதிகரிக்க கூடிய சரியான தொழிநுட்பம் இல்லாத காரணத்தினால் கடந்த காலத்தில் அக்கற்கள் குறைந்த பெறுமதியிலே ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. இந்நோக்கத்திற்காக தேசிய விஞ்ஞான அமைப்பின் நிதியுதவியுடன் இரத்தின மற்றும் ஆபரன ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆராய்ச்சியொன்றினை நடாத்தி 2021 மே மாதம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படடிருக்கவில்லை. | ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது பெறுமதி குறைந்த இரத்தினக்கற்களின் நிறம் மற்றும் தெளிவினை அதிகரிக்க கூடிய தொழிநுட்பத்தில் இலங்கை முன்னிலையில் உள்ளதுடன் இந்நடவடிக்கைகள் தனிவியாபாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இது தொடர்பில் தொடர்ச்சியான மேலதிக விசாரனைகள் நடாத்தப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் வெற்றியடைய கூடுதலான காலம் எடுக்கும். இது தொடர்பில் அரசின் முதலீடு வரையறுக்கப்பட்டிருந்த காரணத்தினால் இரத்தினக்கற்களுக்கு நிறமூட்டுவது தொடர்பாக சப்ரகமுவ பல்கலை கழகத்தின் உதவி பெறப்பட்டது. | பெறுமதி குறைந்த இரத்தினக்கற்களின் நிறம் மற்றும் தெளிவினை அதிகரிக்க கூடிய சரியான தொழிநுட்பம் உருவாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அமைச்சினுடைய முன்னேற்ற அறிக்கையானது பெறுமதி கூட்டலின்றிய கெயுடா (Geuda) ஏற்றுமதி நிறுத்தப்படடிருக்கின்றதென் பதனை காட்டியது. ஆனால் செப்ரம்பர் 2015-2021 காலப்பகுதியில் கெயுடா (புநரனய) ஏற்றுமதி மூலம் ரூபா 306 மில்லியன் உழைக்கப்படடிருந்தது. | தொழிநுட்ப காரணங்களினால் கெயுடா(Geuda),கட்டா(Katta) மற்றும் ஒட்டு யங்(Ottu young) போன்ற பெறுமதி குறைந்த இரத்தினக்கற்களின் ஏற்றுமதி இந்நாட்டினில் அனுமதிக்கப்படடிருந்தது. இது குறிப்பிட்டளவு அந்நிய செலாவணியினை ஈட்டுவதற்கு ஏதுவாய் அமைந்தது. | கெயுடா ஏற்றுமதி செய்வதற்கு உகந்த பெறுமதி கூட்டப்படுகின்ற வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும். |
| (iv) | 2013 ஆம் ஆண்டு ரூபா 10,977,344 பெறுமதியில் கெயுடாவினை வெப்பமேற்றுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உலையொன்று கடந்த 6 வருடங்களாக பயண்பாடின்றிருந்தது. 2021-2021 காலப்பகுதியில் இவ்வுலை தொடர்பில் ரூபா 3,953,540 பெறுமதியான உதிரிப்பாகம் மற்றும் மின்சார இணைப்பு சம்பந்தப்பட்ட மேம்பாடொன்று மேற்கெள்ளப்பட்டிருந்தது. மேலும் 2020-2021 காலப்பகுதியில் இவ்வியந்திரமானது 14 நாட்களுக்கு மட்டும் 5 ஆராய்ச்சி நடவடிக்கைகளில் பயண்படுத்தப்பட்டிருந்தது. | கெயுடாவினை வெப்பமேற்றும் உலையினை திருத்துவதற்கான நடவடிக்கைள் துரிதப்படுத்தப்பட்டிருந்தன.இதற்கு தேவையான உதிரிப்பாகம் இலங்கை எச்.எஸ்(HS) இலக்க குறீயீட்டின் கீழ் இறக்குமதி செய்து பெறப்பட வேண்டும். ஆனால் இக்குறியீட்டின் கீழான குறிப்பிட்ட உதிரிப்பாகத்தின் இறக்குமதி தடைசெய்யப்பட்டு 90 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கடனடிப்படையில் கீழ் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது.இந்நடவடிக்கையானது குறிப்பிட்ட உதிரிப்பாகத்தினை இறக்குமதி செய்வதற்கும் மின்சார இணைப்பினை திருத்துவதற்கும் கூடியளவு நேரத்தினை எடுத்தது. | தேவையான வேலைகளை செய்வதற்க இவ்வுலையானது வினைத்திறனாக பயண்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | நிலத்திற்கு கீழ் காணப்படுவதாக நம்பப்படுகின்ற இரத்தின வளங்கள் உயர்தொழிநுட்பத்தினை பயண்படுத்தி ஆய்வு செய்யப்படுவதுடன் நாட்டின் உற்பத்தி செயன்முறையினை பலப்படுத்தவும் உபயோகிக்கப்படுகின்றது. அமைச்சின் கீழ் இரத்தினம் மற்றும் | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. தற்போது இரு நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கினைப்பினை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | அமைச்சின் நோக்கத்தினை வினைத்திறனாக அடையும் பொருட்டு இவ்விரு நிறுவனங்களுக்குமிடையில் போதிய ஒருங்கிணைப்பு பேணப்பட வேண்டும். |

ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்ச்சி நிறுவனமானது இலங்கையில் காணப்படும் இரத்தின இருப்புக்களை ஆய்வு மற்றும் மதீப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டம் ஊடாக இலங்கையில் இரத்தின சேமிப்புக்கள் காணப்படும் இடங்களை அடையாளப்படுத்தி வரைபு படங்களை உருவாக்குகின்றது.இது தொடர்பில் நடைமுறை மற்றும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும் அதிகாரசபை மற்றும் இரத்தினம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்ச்சி நிறுவனம் ஆகியவற்றிற்கிடையில் போதிய ஒருங்கிணைப்பின்மையினால் மேற்குறிப்பிட்ட நிகழ்சித்திட்ங்களின் முடிவுகளில் தரக்குறைபாடு அவதானிக்கப்பட்டது.

## 3.2 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சானது தனக்கு சொந்தமில்லாத கட்டிடத்தில் இயங்கி வந்ததுடன் ரூபா 12,107,471 ஆனது குறிப்பிட்ட இராஜங்க அமைச்சின் கட்டிடத்தினை திருத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. அமைச்சிற்கு சொந்தமில்லாத இக்கட்டிடத்திற்கு மேற்கொள்ளப்பட்ட குறித்த செலவினை மீளப்பெறுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சானது குறித்த கட்டிடத்திற்கான திருத்த செலவினை அமைச்சின் கீழ் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருந்தது. | தொடர்புடைய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை மீளப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான 5 வாகனங்கள் முறையாக அமைச்சினால் பொறுப்பேற்க படாமல் பயண்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது. | பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. | முறைப்படி பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 இழப்புக்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.யி 104(4) இற்கு இணங்க நட்டமொன்று ஏற்ப்பட்டு 3 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆயினும் கணக்காய்வாண்டின் போது ஏற்ப்பட்ட 3 வாகனங்கள் தொடர்பான முழுமையான நட்ட அறிக்கை 25 மே 2022 வரையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.யி 104(4) ,ற்கு இணங்க வாகண நட்டம் தொடர்பில் சரியான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விசாரனைக்குழு அமைக்கப்பட்டு 20.05.2022 திகதியிடப்பட்ட நினைவூட்டல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அறிக்கை பெறப்பட்டவுடன் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நி.யி 104(4) ,ற்கு இணங்க செயற்பட வேண்டும். |

**4 மனிதவள முகாமைத்துவம்**

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையானபணிநிலை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியாண்டின் போது ஆங்கீகரிக்கப்பட்ட பணிநிலை 40 ஆக இருக்க உண்மையான பணிநிலை 11 ஆக இருந்தது. எனவே வெற்றிட எண்ணிக்கை 29 ஆகும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | சேவைத்தேவைகளை கருத்திற்கொண்டு பணியிட வெற்றிடங்களை நிரப்புவதற்கு உகந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். |